Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

(1889)

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரிஸு ஐப்பசிமீ உகஉ வெள்ளிக்கிழமை (11 November 1960) [இல-கஉ]

அரசியல் அலை

# நம்புங்கள் நம்புங்கள் என்று நாக்குவீர ஆறுதல் நவினம்?

## ஆனால் அந்தத் தனிச்சிங்கள அலுவல் நடந்தபடியே நடக்கிறது!

சுதந்திரக் கட்சியும் சமட்டிக் கட்சியும் என்னவிதத்தில் ஒன்றுக்கொன்று நட்பாகவோ எதிராகவோ இருக்கின்றன என்று எவரும் அறியாதவிதம் காரியங்கள் நடைபெறுகின்றன. மன்னாரில் நடந்த கூட்டத்தைப் பற்றி என்னவோ எல்லாம் அறிக்கைகள் வந்தனவே, இவற்றின் பொழிப்பென்ன.

பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுக்கும் திட்டத்தைக் கொணர்ந்த பின் சுதந்திரக் கட்சியை நம்பி நட்டாற்றில் திக்குமுக்குப்பட எந்தக் கட்சியாவது விரும்புமா? செயலாற்றும் வகையில் எல்லாருக்கும் நீதி வழங்குவோம் —(Fairness to all in all administrative affairs) என்று சிறிமாவோ அரசாங்கம் சொல்லிக் கொண்டே தனிச்சிங்களச் சட்டத்தை மூலைமுடுக்குகளிலும் எல்லா வகையிலும் செயலாற்றத் தொடங்கிவிட்டது. பள்ளிக்கூடச் சட்டம் மகா தேசாதிபதியின் அங்கிகாரம் பெறுமுன் மூகாமைக்காரர் சிலர் தமிழ்ப்பிரதேசத்திலே தங்கள் பள்ளிக்கூடங்களைத் தாரை வார்த்துத் தத்தம் பண்ணிக் கொடுக்கின்றார்கள். பள்ளிக்கூட ஆசிரியர்கள் உள்ளம் பூரித்தபடி இருக்கின்றார்கள். அரசியற் கட்சிகள் என்ன செய்கின்றன. இடது கட்சிகளின் போக்குத் தெரிந்ததே. ஏனைய கட்சிகளின் நிலைமை என்ன சமாதானப் பேச்சு நடத்திக் கொண்டு காலத்தைக் கழிப்பதுதானா?

### புதிய அமெரிக்க சனாதிபதி

மேற்சபை அங்கத்தவர் ஸ்ரீ ஜோன் கென்னடி அமெரிக்க சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பெற்றுள்ளார். ஸ்ரீ கென்னடிக்கு 353 வாக்குகளும் ஸ்ரீ நிக்சனுக்கு 149 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஸ்ரீ உறூஸ்வெல்ற்றுக்குப் பின் இவரே மிகக் குறைந்த வயதுள்ள சனாதிபதியாயமர்கின்றார். முதலாவது கத்தோலிக்க சனாதிபதியாயும் இவர் அமர்கின்றார் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. ஸ்ரீ எல். ஜோன்சன் உபசனாதிபதியாகின்றார்.

### இந்துசமய ஆலோசனைச் சபை இராமாயணச் சொற்பொழிவுகள்

இந்துசமய ஆலோசனைச் சபை ஆதரவில் பேராசிரியர் திரு. எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரிகள் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் "நவம்பர்" மாதம் 11-ம், 12-ம் 13-ம் திகதிகளில் பிரதி தினமும் 6 மணி தொடக்கம் இராமாயணத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள். 11-ந் திகதி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமை வகித்துச் சொற்பொழிவுகளை ஆரம்பித்து வைப்பார்கள்.

### மகாத்மா தபால் முத்திரைகள்

அமெரிக்காவில் வெளியீடு

வாஷிங்டன், கார். 4

வரும் தைமாசம் 26-ந்தேதி (இந்தியக் குடியரசு நாள்) வெளியாக இருக்கும் இரு அமெரிக்க தபால் முத்திரைகளில் இந்தியாவின் மதிப்புக்குரிய தலைவர் மகாத்மா காந்தி "அஹிம்சாமூர்த்தி" என்று சிறப்புடன் குறிக்கப்படுவார். காந்திஜி தபால் முத்திரைகள் வெளியிடப்படும் என்று முன்பே அறிவித்த "யு. எஸ். போஸ்ட் மாஸ்டர்-ஜெனரல் ஆர்தர் ஸம்மர்பீல்டு" புதிய தபால் முத்திரைகள் எவ்வாறிருக்கும் என்று வருணித்துள்ளார். புதிய "நாலு சென்ட், எட்டு சென்ட்" தபால் முத்திரைகளில் காந்திஜி படம் அச்சிடப்பட்டிருக்கும்; இது, ஆர். எல். லேக்கி வரைந்த படத்தை அடிப்படையாகக் கொண்டது. மகாத்மாவின் திருவுருவப்படத்தைச் சுற்றிலும் "மகாத்மா காந்தி, 1869–1948, அஹிம்சாமூர்த்தி" என்ற வாசகம் அச்சிடப்பட்டிருக்கும்.

இந்தியக்குடியரசு [illegible] புதிய தபால்முத்திரைகள் வெளியிடப்படுகின்றன என்றும் ஸம்மர் பீல்டு தெரிவித்தார். இந்த நாள் பொருத்தமான தென்றும், ஏனெனில், 'சுதந்திர வாழ்வில்தான் இந்திய மக்கள் மதிப்பும், வளமையும், சமூக நீதியும், தன் முயற்சியால் இலட்சிய நிறைவும் காணமுடியும்" என்று [illegible]

### நற்சிந்தனை

நம்பினபேர் தமக்கருளை
 நயந்தளிக்கும் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற
 மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக
 விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர்
 சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா
 யமர்ந்திருக்குந் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா
 யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன்
 தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூ ழிலங்கைவாழ்
 தெய்வமிது தானே.

(சிவ தொண்டன்)

### நிதி நிலைய உத்தியோகத்தர் சம்பளம்பெற மறுப்பு

சம்பள இடாப்பு சிங்களத்தில் மாத்திரம் அமைக்கப்பட்டிருப்பதாலும், தங்களுக்குச் சிங்களம் தெரியாமையாலும் இடாப்பில் கையெழுத்து வைத்துச் சம்பளமெடுக்கப் பதினாறு நிதிநிலைய உத்தியோகத்தர் மறுத்து நிலையக் காரிய தரிசிக்கு முறையிட்டனர். தாம் எதுவும் செய்ய முடியாதென்றும் அவர்கள் சிங்களத்திற் பழகிக்கொள்ள வேண்டுமென்றும் அவர் பதிலளித்தார். ஆனால் அந்நிலைமையில் சம்பளம்பெற அவ்வுத்தியோகத்தர் மறுத்து நிற்கின்றனர்.

### பாடசாலைச் சட்டம்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு

ஸ்ரீ சிறில். ஈ.எஸ். பெறெறு கியுசி அவர்கள் தலைமையில் கொழும்பில் நடந்த கத்தோலிக்க மக்கள் கூட்டத்தில், பாடசாலைச் சட்டம் நீதிமன்றத்துக்குக் கொண்டுபோகப்படுமென்று பல பேச்சாளர்கள் குறிப்பிட்டனர். பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை உரத்து எதிர்ப்பதாகவும், அரசாங்கத்தின் இச்செயல் மக்களின் சாதாரண உரிமைகளை மறுப்பதாயுள்ளதென்றும் பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன.

யாழ் மாநகர சபைத்தேர்தல்

## பழைய அங்கத்தவர்கள் பலர் விலகிவிட்டனர்

### கட்சிகளும் தனிப்பட்டவர்களும் கடும் போட்டி

இடதுசாரிகள் 4, சமஷ்டி 8, தனிப்பட்டோர் 33 ஆக 45 அபேட்சகர்கள் 15 வட்டாரங்களிற் போட்டியிடுகின்றனர். எல்லா வட்டாரங்களிலும் அரசியற்கட்சிகள் போட்டியிடாத காரணமென்னவென்று வாக்காளருக்கே விளங்கவில்லை.

**1-ம் வட்டாரம்**

ஏ ஜி இராஜசூரியர் (சு) சைக்கிள்
ஐ. எஸ். இராசநாயகம் (சு) நட்சத்திரம்
எஸ். செல்வராசா குடை

**2-ம் வட்டாரம்**

பி. எம். ஜோன் (சு) சைக்கிள்
ஏ. ஜோசப் (சு) குடை
ஜே. எப். சிக்மலிங்கம் (சு) யானை

**3-ம் வட்டாரம்**

என். ஆசீர்வாதம் (சு) நட்டத்திரம்
எம். ஜேக்கப் (சு) சைக்கிள்
டி. ஜேம்ஸ் (சு) வீடு
வை. செல்லத்துரை குடை

**4-ம் வட்டாரம்**

எஸ். ஜே. அழகையா கதிரை
ஏ. ரி. துரையப்பா சைக்கிள்

**5-ம் வட்டாரம்**

ரி. கந்தையா திறப்பு
டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் (வீடு) (தமிழரசுக்கட்சி)
எஸ். ஏ. வைத்திலிங்கம் (சைக்கிள்)

**6-ம் வட்டாரம்**

எஸ். ஸி மகாதேவா (தமிழரசு) சைக்கிள்
கே. எஸ். நடராசா (வீடு)

**7-ம் வட்டாரம்**

ஏ. நடராசா (சைக்கிள்)
எஸ். பரநிருபசிங்கம் (யானை)
கே. துரைசிங்கம் (வீடு) (தமிழரசு)

**8-ம் வட்டாரம்**

வி. கனகசபாபதி (நட்சத்திரம்) (கம்யூனிஸ்கட்சி)
எஸ். கதிரவேலுப்பிள்ளை (வீடு) (தமிழரசு)
ஏ. துரைராஜசிங்கம் (திறப்பு) (சமசமாஜக்கட்சி)

**9-ம் வட்டாரம்**

கே. ஐயாத்துரை (சு) சைக்கிள்
எ... தேவபாலசுந்தரம் (சமசமாஜக்கட்சி) (திறப்பு)
எஸ் எஸ். நவரத்தினம் (சு) (குடை)
எம். வைத்திலிங்கம் (வீடு) (தமிழரசு)

**10-ம் வட்டாரம்**

எம். பாலசிங்கம் (வீடு) (தமிழரசு)
ரி. எஸ். துரைராஜா (சு) (சைக்கிள்)
எம். கார்த்திகேசன் (கம்யூனிஸ்ட்) (நட்சத்திரம்)

**11-ம் வட்டாரம்**

ஹாஜி-வி எம்.எம். அபூசாலி (சு) (சைக்கிள்)
முகமது யூசுப் சாஹிப் மரைக்கார் (சு) (யானை)

**12-ம் வட்டாரம்**

எம். எம். சுல்தான் (சு) (யானை)
எம். ஏ. ஸி. சுல்தான் அப்துல்காதர் (சு) (சைக்கிள்)

**13-ம் வட்டாரம்**

வி. தெய்வேந்திரம் (சு) (சைக்கிள்)
எம். மகேசன் (சு) (வீடு)
எஸ். இரசரத்தினம் (திறப்பு)

**14-ம் வட்டாரம்**

ஆர். ஸி. மன்மதராயன் (சு) சைக்கிள்
ரி. கே. இராஜரத்தினம் (சு) குடை
என். செல்லத்துரை (யானை) (தமிழரசு)
கே. சிவகுமாரன் (சு) வீடு

**15-ம் வட்டாரம்**

எஸ். ஆசீர்வாதம் (சு) நட்சத்திரம்
ஜே ரி. இராஜரத்தினம் சைக்கிள்
எஸ். ரி. சொலமன்ஸ் (திறப்பு)
பி. எஸ். சோமசுந்தரம் (வீடு) தமிழரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சார்வரி ஸூ ஐப்பசி மீ
உகூ௨ வெள்ளிக்கிழமை

## கல்வி அமைச்சரின் கருத்தென்ன ?

கலியுக விபரீதங்களிவையே என்று கருதப்படத் தக்கதாக சுதந்திரக் கட்சியின் ஆட்சி முறை செயலாற்றப் பெறுவதை நோக்குமிடத்து எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்றதென்ற கவலை மக்களிடம் தோன்றுகின்றது. பள்ளிக்கூடங்களை அரசினர் எடுப்பதாகும் கொள்கையை முதல் முதலாகச் சிம்மாசனச் சொற்பொழிவிலே குறிப்பிட்ட பின் அதற்கென ஒரு திட்டத்தை அரைகுறையாக மக்கள் சபையிலே கொண்டு வந்தனர், அரசியலிலும் மக்கள் வாழ்க்கை இயலிலும் பெரிய மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட திட்டம் இது ஆகையால் அதைப்பற்றிய விபரங்கள் விருத்தாந்தங்கள் முற்றிலும் வெளியிடப்படவேண்டும் என்று பலர் தங்கள் கருத்துக்களை எடுத்துக் காட்டி எதிர்த்தார்கள். கட்சிப் பலத்தினலும் பொதுவுடைமைக் கொள்கையினரின் உதவியினலும் திட்டம் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது; மேற்சபையில் இப்பொழுது விவாதிக்கப்படுகின்றது. இதற்கிடையில் இத் திட்டம் சட்டமாகிச் செயல் முறையில் வருங்கால் மாணக்கர்கள் ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களை இதுவரை காலமும் நடத்தி வந்தவர்கள் எவ்விதமாகப் பாதிக்கப்படுவார்கள், அவ்விதம் பாதிக்கப்படுபவர்களுக்கு என்ன நட்ட ஈடு அரசாங்கம் அளிக்கும், என்ற இன்னோரன்ன பல கேள்விகளுக்கு மறுமொழியோ குறிப்புரையோ யாதுங் கூருது கல்வி அமைச்சர் மேனட்டுக் கல்வி முறையைத் தானகப் பார்த்து அநுபவம் அடைய வேண்டுமென்று காரணம் காட்டிப் பயணம் செய்ய முயன்று வரவு செலவுத் திட்டத்திலே கல்வி அமைச்சின் கீழ் உள்ள செலவினங்களைப்பற்றி விரைந்து ஆராய்ந்து முடித்துவிட வேண்டுமென்று மக்கள் சபையிலே தன் எண்ணத்தை நாட்டியிருக்கின்ருர்.

அவ்வளவில் அந்த அமைச்சரின் ஆர்வம் நின்றுவிடவில்லை. பள்ளிக்கூடங்களை எடுக்குந்திட்டத்திற்கு மாருகக் கூட்டங் கூடிப் பேசுகின்றவர்களைப் பின்ருெடர்ந்து உளவு பார்க்கும் ஒற்றர்படையை

# சங்ககாலந் தொடக்கம் ஆட்சியிலுள்ளது “கந்தன்” என்னும் சொல்

—o—o—

## அலெக்சாந்தர் பற்றிய கருத்துக்கு ஆதாரம் சிறிதுமேயில்லை

[தினகரன் தமிழ்விழாச் சிறப்பு மலரில் வெளியான “முருக வழிபாடு” என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக் கருத்துக்கள் பலவற்றை முன்பு கண்டித்த ஆசிரியர் திரு மு. வைத்தியலிங்கமவர்கள் மகா அலெக்சாந்தர்பற்றிய கருத்துக்களையும் “கந்தன்” என்னும் சொல்பற்றிய கருத்துக்களையும் இங்கே கண்டிக்கிருர். ப—ர்.]

முற்ருெடர்—8

கி. பி. முதலாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஃவிலேவியுஸ் ஏறியானுஸ்(Flavius Arrionus) என்னும் பெயருடைய ஒரு கிரேக்கர் இருந்தார். இவர் மகா அலெக்சாண்டரின் சீவிய சரிதத்தை எழுதியிருக்கிருர். இது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மகா அலெக்சாண்டரைப்பற்றிக் கூறும் நூல்களுள் இதுவே மிகச் சிறந்ததும் பூரணமானதும். இந்த நூலின் முதற் புத்தகத்தின் முகற் பந்தியின் கருத்துப் பின்வருமாறு:- “நான் எழுதும் நூலுக்கு ஆதாரங்கள் தொலெமியும் (Ptolomy) அறிஸ்ரோபுலுசும் (Aristobulus) எழுதிய சரிதங்களாகும். மற்றவர்கள் எழுதிய நூல்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளவைகள். தொலமியும் அறிஸ்ரோபுலுஸும் எழுதிய சரிதங்களிலும் முரண்பாடு உண்டு. ஒற்றுமையான இடங்களைப் பின்பற்றியிருக்கிறேன். முரண்பாடான இடங்களில் சிரத்தை யூட்டக்கூடிய நிகழ்ச்சிகளையும், நம்பக் கூடியவைகளையுமே எடுத்தாண்டிருக்கிறேன். அலெக்சாண்டரைப்பற்றி எழுதியவர்களுள் தொலெமியும் அறிஸ்ரோபுலுஸும் பொய் கூறியிரார்களென நான் கருதுகிறேன். அறிஸ்ரோபுலுஸ், மகா அலெக்சான்டரின் யுத்த ஏற்பாடுகளில் பங்குபற்றியவர்; தொலமியும் பங்குபற்றியவர், அன்றியும் அரசனுகவும் இருந்தவர். ஓர் அரசன் பொய் சொல்வது மிகவும் மானக்கேடானசெயல். ஆகையால் தொலமி பொய் சொல்லி இரார். அல்லாமலும் இவர்கள் எழுதிய காலத்தில் மகா அலெக்சான்டர் இறந்துவிட்டார். இவர்களை இப்படித்தான் எழுதென்று நெருக்குவார் இல்லை. பொய் சொல்வதினல் பலனுமில்லை. இந்த இருவர்களையும் தவிர மற்றவர்கள் எழுதிய கதைகள் நாட்டிலேநிலவிவந்த கர்ண பரம்பரையானகட்டுக்கதைகள். இவைகளுள் சில கவர்ச்சிகரமானவையாயும் சிலவேளை உண்மையாயும் இருக்கலாம். அப்படிப்பட்ட கதைகளை நான் அனுவதித்திருக்கிறேன்.”

**திரு. மு. வைத்தியலிங்கம்**

இன்னும் எரியன் எழுதிய நூலில் இரு சம்பவங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. மிகச்சுவையானவை. கட்டாயம் இந்திய சரித்திர மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியவை. முதற் சம்பவம் எரியன் எழுதிய நூலின் ஆங்கிலமொழிபெயர்ப்பில் 158ம் பக்கத்தில்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

ஊக்கப்படுத்திச் சனநாயகக் கொள்கைக்கு முற்றிலும் முரணை வழியில் இறங்கியிருக்கின்றனர். ஆட்சியாளர்களே அனைத்ததிகாரமும் உள்ளவர்கள், அவர்கள் செய்யும் முடிபுகளை மக்கள் பேச்சுமூச்சின்றி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற உருசியப் பொதுவுடைமை அரசியல் முறையை இங்கு செயலாற்றத் துணிந்துவிட்டனர். காலித்தொகுதிப் பாராளுமன்றத்து அங்கத்தவர் திரு வி. தகநாயக அவர்கள் மக்கள் சபையில் வெளியிட்ட அரசியல் உளவு அலுவலாளர்களின் செயலைப் பார்க்கும் பொழுது சுதந்திரக்கட்சியின் நோக்கம் மக்களின் பிறப்புரிமையாகும் பேச்சுச் சுதந்திரத்தையும் பிற உரிமைகளையும் பறித்துவிட்டுத் தனி அதிகார ஆட்சி நடத்துவதென்றே தோன்றுகின்றது. இவ்வளவுதூரம் ஆட்சி ஆதிக்க இறுமாப்பு உண்டாகிவிட்டதா என்று கேட்கின்ருேம். அதிகார வெறியினல் அறிவிழந்து நெறி பிறழந்து முறைதவறித் தன்னிட்ட ஆட்சி நடத்திய முசோலினி கிட்டிலர் முதலியவர்கள் வரலாற்றை இந்நாட்டு அரசியல் ஆதிக்கக் கட்சியினர் அடிக்கடி மனத்தில் ஆராய்ந்து அகந்தையை அகற்றிப் பண்புள்ள ஆட்சியை நடத்தும் வண்ணம் அவர்களுக்குப் புத்திபுகட்ட வேண்டியவர்கள் மக்களே.

—

### பள்ளிக்கூட நிலைமைகளில் மாற்றமில்லை

பள்ளிக்கூடங்களின் பெயர்களை மாற்றும் கருத்து கல்வி அமைச்சுக்கில்லை. பழைய மாணவர்கள் பெற்ருேர் பெருப்பான்மையினர் விரும்பினல் பெயர் மாற்றஞ் செய்யலாம். பள்ளிக்கூடங்கள் இருந்தபடியே இருக்கும். ஆசிரியர்கள் இருந்தபடியே [illegible] கருத்துக்களைக் கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

### சமயக்கல்வி ஆசிரியர்களின் சம்பளம்

—:—

சமயக் கல்விப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு, பிற துறைகளில் விசேட தகுதி பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோல் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக்கேட்பதென இலங்கைச் சைவப்புலவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

---

### கோயிலாக்கண்டிச் சிவன் கோயில்
## திருப்பணி நிதி

| | ரு. | ச. |
|---|---|---|
| முன் சேர்ந்த தொகை | 310 | 50 |
| திரு. சு. சிவசுப்பிரமணியம் (கொழும்பு) | 5 | 00 |
| ,, ஆ. தனபாலசிங்கம் (ஆனைப்பந்தியடி) | 200 | 00 |
| பிரம்மஸ்ரீ. R. S. இரகுநாத ஐயர் (கொக்குவில்) | 25 | 00 |
| | 540 | 50 |

## இன்றுள்ள ஆபத்தை நீக்கும் வழி ஒன்றுமில்லையா?

தமிழினமோ தனிப்பெரும் வாழ்க்கைப் பண்பாட்டைத் தன் பிறப்புரிமையாய்ப் பெற்றுள்ள ஒரு இனம். இவ்வுண்மை பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பலவாறு பேசப்பட்டு வருகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த இனத்தின் ஒரு பகுதியாயமைந்துள்ளது ஈழத் தமிழினம் உடொனமூர் அரசியல் திட்டம் நடைமுறைக்கு வருதற்கு முன் ஈழத்தமிழர் பெருமை ஒருவாறு பாதுகாக்கப்பட்டு வந்தது. உடொனமூர்த்திட்டத்துடன் தொடங்கியது சீர்கேடு. அது சிறிது சிறிதாய் வளர்ந்து இன்று ஆபத்தான நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. தமிழினம் என்பது ஒன்று இந்நாட்டில் இல்லாமற் போகும் அளவுக்கு ஆபத்து மிகுந்துள்ளது.

இந்த ஆபத்தான நிலைமையிலுமே, சமயத்துக்குச்சமயம் மாறு, சாதிக்குச்சாதி மாறு, கட்சிக்குக்கட்சி மாறு, குடும்பத்துக்குக் குடும்பம் மாறு, ஆளுக்கு ஆள் மாறு என்றளவுக்கு எங்கள் வாழ்க்கை அலங்கோலமாயிருக்கின்றது. இந்நிலைமை இவ்வாறு நீடித்து இந்நாட்டில் எம் இனம் அற்றுப்போவதை நாம் வரவேற்கின்ருேமா? இப்பொழுதிருக்கும் நிலைமை நீடிக்குமானல், எம் இனத்திலுள்ளவர்கள் மனச்சமாதானத்துடன இந்நாட்டில் இன்புற்று வாழுதலும ஆகும் என்று நினைப்பவர்களும் இருக்கின்ருர்களா? ஆபத்தான இந்நிலைமையிலிருந்து நீங்கும் வழிகாண முடியாதா? அறிஞராவார் ஆழ்ந்து சிந்திப்பார்களா? செயலாற்றும் வழி காண்பார்களா?

வள்ளுவன்,
யாழ்ப்பாணம்
7-11-60.

---

# துப்பறியும்சுப்புமாமா

## அம்மாவைச் சும்மா காணமுடியாது!




**அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு** என்ற நாற்குணங்களும் அமைந்த அம்மாவே எங்கள் முதல் அமைச்சர். சந்தேகமில்லை என்கின்ருர் சுப்பு மாமா. பெண்கள் பலர் மூவாயிரத்துக்கு மேலானேர் கூடிப் பேட்டி காணப் போனபொழுது சிறிமாவோவுக்கு அச்சம், அவர்களுக்கு என்ன சொல்வதெனத் தெரியாது மடம், அவர்களைக் கண்டு மனம உடைந்துவிடும் என்ற நாணம். இவையெல்லாம் உடன் செயலாற்றின என்றல் நாற்குணமும் நல்லமைச்சாயுள்ள சிறிமாவோ முதல் அமைச்சராயிருப்பதற்கு என்ன குறை?

# ஈழத்து அகஸ்தியர் நினைவு நாள்

## அவர் பணியை நிறைவேற்ற வேண்டிய கடமை

நம் ஈழவளநாடு பண்டைக் காலத்தில் பல புலவர்களையும், அறிஞர்களையும் உடைத்தாக விளங்கியது. யாழ்ப்பாணத்தில் ஒரு குருபரப்பரையே தமிழில் பெரும் பாண்டியத்தியம் பெற்று விளங்கிவந்தது. அந்தப் பரம்பரையில் வந்தவரும், இலக்கண மகாமேதையும், இறைபக்தியில் ஈடு இணையற்றவருமாகிய வித்துவசிரோன்மணி கணேசையர் அவர்களின் சிரார்த்த தினம் (8 - 11 - 60) ஐப்பசி 23-ந்திகதி செவ்வாய்க்கிழமையாகும். எனவே நம்மனோர்க்கெல்லாம் ஆசிரியராக விளங்கிய பெரியரை நினைவுகூரும் முகமாக அன்னாரின் சிறப்புகளைச் சிந்திப்பாம்.

அன்னாரின் மாணவர்களும், அபிமானிகளும் சேர்ந்து அவர்கள் வசித்த வருத்தலைவிளான் - மருதடி விநாயகராலயத்திற்கு அருகாமையில் நினைவுச் சின்னம் ஒன்று அமைத்தார்கள். அத்துடன் பாராட்டு விழாவும் நடத்தினார்கள். அவ்விழாவே அவர்களது செந்தண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. அறிஞர்களும் அபிமானிகளும் பக்திசிரத்தையுடன் குழுமி நின்று விழாவைச் செவ்வனே நடத்தினார்கள். மாவட்ட அதிபரின் மாண்புமிக்க தலைமைப்பேருரையையும், மற்றும் அறிஞர்களுடைய சொற்பொழிவுகளும் மிகச் சிறப்பாக அமைந்து விளங்கின. பண்டிதமணி திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆசிரியரின் இயல்புகளை மிகத் தெளிவாக விளக்கினார்கள்,

நமது ஆசிரியர் அவர்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆனால் அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையுந்தரத்ததன்று. மொழி வளர்ச்சிக்கு உழைத்ததுடன் அமையாது மருதடி விநாயகராலயத்திற்கும் பெரும் திருப்பணிகள் நிறைவேற்றியுள்ளார்கள். வருத்தலைப்பதி வாழ் மக்கள் ஆசிரியரிடத்தில் கொண்ட அன்பும் விசுவாசமும் அளவிடற்கரிது. இன்றும் அக்கிராம மக்கள் அன்னாரின் பிரிவைக் குறித்து வருந்துவதைக் காணலாம். ஆசிரியரின் பூதவுடல் அழிந்தாலும், புகழுடல் அழியாது அக்கிராம மக்களுக்கு நல்லாசி கூறுமென்பதிற் சந்தேகமில்லை.

நாம் பெரியார்களுக்கு விழா வெடுப்பதோடமையாது அவர்களின் நன்னோக்கங்களை நிறைவேற்றுவோமானால் அது அவர்களுக்கு மிகவும் மகிழ்வை அளிக்கும். ஆசிரியர் அவர்கள் தமது இறுதிக் காலததில் சங்க இலக்கியமாகிய அகநானூற்றிற்கு விரிவுரை எழுதிவந்ததை யாவரு

ஸ்ரீ. சி. கணேசலிங்க ஐயர்
தெல்லிமாநகர்

மறிவர். ஆனால் அது முற்றுப்பெறுமுன் அவர்கள் காலன் கைவசம் சிக்கிவிட்டார்கள். எனவே அவர்களது மாணாக்கர்களாக விளங்கும் பெரியார்கள் எவரேனும் இப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றி முடிப்பார்களேயானால் தமிழுலகிற்குப் பெரிதும் பயன்படும்.

ஆசிரியர் அவர்களுக்கு ஞாபகச்சின்னம் அமைத்ததுடன் அமையாது ஞாபக மலர் ஒன்றும் அண்மையில் பெரியார்களால் சிறப்பாக வெளியிடப்பட்டது. அன்னாரை என்றும் ஞாபகப்படுத்துவதற்கு ஓர் ஒப்பற்ற துணையாய் அமைகின்றது இந்த ஞாபகமலர்.

ஆசிரியர் அவர்கள் தமது இறுதிக்கால வாழ்க்கையை ஒரு தவவாழ்க்கையாகவே நடாத்தினார்கள். இதனை நேரிற் பார்க்கும் பாக்கியம் சிறியேனுக்குக் கிடைத்திருந்தது, கல்வியால் வரும் பட்டம் பதவிகளையெல்லாம் உதறித்தள்ளினார்கள். தம்மிடத்துப் புலமை இருக்கின்றது என்ற பெருமைகூடச் சிறிதும் அவர்களுக்கிருக்கவில்லை. மிகவும் எளிய தூய வாழ்க்கையே வாழ்ந்தார்கள். "அவனன்றி ஓர் அணுவுமசையாது' என்ற ஆப்தமொழிக்கிணங்க, இறைவழிபாடும், இறைவனது அருளைப்பெற வேண்டும், ஆன்மா நன்னிலையடைய வேண்டும், என்னும் கருத்தே அவரது இறுதிக் குறிக்கோளாக விளங்கியது. "ஈழத்தின் அகத்தியர்" எனப் புகழ்பெற்ற நமது ஆசிரியர் அவர்களுக்கு என்றென்றும் இறைவனின் இணையிலாத் திருவருள் துணைசெய்யுமென்பது வெள்ளிடைமலை.

---

## பண்டையோர் மரபைப் போற்றி வாழ்ந்த ஒருவர்

### "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்று நூல்செய்து உதவியவர்

( முற்றொடர் )

கந்தரோடையைச் சேர்ந்தவரும் பிரபல வழக்கறிஞருமாக விளங்கிய திரு. பொன்னம்பலம் என்பவருடைய முகாமையிலுள்ள நயினாதீவு தில்லையம்பல வித்தியாசாலையின் ஆசிரியராகத் தையிட்டியிலிருந்து மாற்றப்பெற்றுச் சென்றார், அங்கு அவர் துணைவியுடன் வாழ்ந்து வரும் நாளில் நாகபூஷணி அம்மன் கோவில் திருப்பணி வேலைகளுக்கு உதவியாக இருந்தார்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வெளியீடான 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையின் ஆரம்ப முதற்கொண்டே பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தார், திருக்குறள், பரிமேலழகர் உரை விளக்கக் குறிப்பும், இராமாவதார செய்யுட் பாடாந்தரங்கள் என்னும் தலைப்பில் இராமாயணததின் கண் உள்ள பாட

ஸ்ரீ. இ. சுந்தரராஜ சர்மா

பேதங்களும் தெரிந்தெடுத்து எழுதி வந்தார். இவரது கட்டுரைகளை யாவரும் விரும்பிப் படித்தனர். இதற்கு உதாரணமாக அப்போது 'செந்தமிழ்' பத்திராதிபராக விளங்கிய காலஞ்சென்ற தமிழ்ப்பண்டிதர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய கடிதத்தைக் குறிப்பிடலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்
30-5-1906.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் "தொனி" என்னும் அரிய விஷயம் அனுப்பியபின்பு, வேறு விஷயம் அனுப்பாமைக்குப் பலர் (அவாவுடன்) வருந்துகின்றார்கள். தயைசெய்து "இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரத்தின்" தொடர்ச்சியை அனுப்பிவரின் உபகாரமென்பதைச் சொல்லல் மிகை தாங்கள் நீண்டநாளாகக் கடிதம் எழுதாதிருப்பதையிட்டுக் கவல்கின்றேன். தங்கள் அன்பார்ந்த கடிதத்தை எதிர் நோக்கியுள்ளேன்.

இங்ஙனம்,
அன்பன்
மு. இராகவையங்கார்.

வடமொழி, தென்மொழி இரண்டிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கிய, சுன்னாகம் ஸ்ரீமத், அ குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் ஐயர் அவர்கள் ஆராய்ச்சி செய்யும் திறனைக்கற்றார். தருக்க இயலில் பேராற்றல் பெற்று விளங்கினார்.

அறிஞர்கள் நூல்கள் செய்வதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவது காரணம் உயிர்கள் மாட்டுள்ள கருணை, மற்றது தக்கார் ஒருவர் நூல் செய்து தருமாறு வேண்டல். முன்னையோர் மரபினை ஒட்டியே கணேசையர் அவர்கள் வாழ்ந்தார்.

'அறுநான்கிரட்டி இளமை நல்யாண்டு ஆறினிற் கழிப்பிய' என்று திருமுருகாற்றுப் படையில் ஒருவரி வருகின்றது, முன்னைத்தமிழர் நாற்பத்தெட்டு வயதுவரை கல்வியிற் கழிப்பார்களாம், அதே போன்று வாழ்க்கையின் பெரும்பகுதியை ஐயர் அவர்கள் கல்வியிற்கழித்தார்.

அரசகேசரியாற் பாடப்பெற்ற இரகுவம்சம் என்னும் நூலுக்கு உரை எழுதி வெளியிட்டார். தொல்காப்பியம் என்னுஞ் சுழி கடலிடைப் புகுந்த 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் திருவாக்கிற்கு ஒப்ப, தொல்காப்பியத்தின் கண் தாம் அநுபவித்துள்ள இன்பங்களை, மாணவர்கள் இலகுவாகவுணர்ந்து இன்புறுதல் வேண்டும் என்று விரும்பினார், —தொடரும்.

---


### கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்,
தங்கம்மா சபாபதிப்பிள்ளை
ஆறுமுகத்தின் கைம்பெண்
—வழக்காளி,
வழக்கு இல: M. B. 2952
எதிராக
சங்குவேலி,
1. கந்தர் சின்னையா
2. சின்னம்மா சின்னையாவின் மனைவி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 2952-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டு காணிகள் 1960 - ம் வருடம் கார்த்திகை மாதம் 26-ந் திகதி (26-11-60) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 1877-ம், 28-7-59 தொடக்கம் 5 - 11 - 59 வரைக்கும் ரூபா 1500-க்கு 10 வீத வட்டியும், அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 186-93 சதமும்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப்பகுதி, உடுவில் கோயிற்பற்று; சங்குவேலி இறை, "கோட்டையடி" (KODDAIYADY) நிலப்பரப்பு 3 குளி 7. பயிர்களும் வீடும், அடுக்களையும். எல்லை கிழக்கு இராமு பொன்னம்பலத்தின் ஆதனம். வடக்கு அப்புக்குட்டி மார்க்கண்டுவின் ஆதனமும் பொதுப்பாவிப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாதை முகப்பும். மேற்கு தம்பியையா மனைவி பூமணியின் ஆதனம். தெற்கு கந்தர் சின்னையாவின் ஆதனம் இதடங்கலும் அப்புக்குட்டி மார்க்கண்டுவின் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும், தூர்வை, வழி வாய்க்கால், ஆடுகால் உரிமையும்.

2. ஷெ சங்குவேலி இறை, "கோட்டையடி" (KODDAIYADY) நிலப்பரப்பு 3. பயிர்களும், எல்லை கிழக்கு இராமு பொன்னம்பலத்தின் ஆதனம். வடக்கு கந்தர் சின்னையாவின் ஆதனம். மேற்கு சின்னையா கைம்பெண் தங்கமுத்துவின் ஆதனம். தெற்கு தில்லையம்பலம் மார்க்கண்டுவின் உரிமையாளரின் ஆதனம். இதடங்கலும்,

சே. பாண்டித்துரை
கொம்மிஷனர் &விலைமதிப்பாளர்.
Commissioner of Sales & Valuer
மல்லாகம், 14-10-60.
M 141 11—11—60.


---

### சிங்கள அரசாங்க ஊழியர் சம்மேளனம்

சிங்கள அரசாங்க ஊழியர்களின் இருபது தொழிற் சங்கங்கள் ஒன்றுகூடி ஒரு சிங்கள அரசாங்க ஊழியர் சம்மேளனத்தை அமைத்துள்ளனர்.


---


### தொழில் நுட்பக் கல்லூரி
(SCHOOL OF TECHNOLOGY)
சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்ற்றில் வகுப்பு ஆரம்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பர். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நயினாதீவு
### நாகபூஷணி அம்மன் கோவில் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

நிகழும் ஐப்பசி மீ 25-ந்வ (10-11-60) வியாழக்கிழமை காலை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் பரிவார மூர்த்திகளாகிய தேரடி வைரவருக்கும் சண்டிகேஸ்வரிக்கும் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. நவக்கிரகங்களுக்கு சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. பெருந்தொகையான அடியார்கள் சமுகமாயிருந்து வழிபாடாற்றினர்.

---

### வெந்தீஸ் விற்பனை
### அடைவு நகைகள்

தா. சி. குமாரசாமி.

576/6 அம்மன்கோவில்ரோட், கலட்டி, யாழ்ப்பாணம்.

மேற்படி அடைவு கடையில் 1959-ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1959-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1960-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்,

வெந்தீஸ் மேஸ்தர்
வண்-வட-மேற்கு
ஆனைக்கோட்டை.

M 138 4, 11-11-60

---

சங்கானை
அரசடி வயிரவர் கோவில்
### தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்கானை அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த்திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,

பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,

F 191 19-9-60.

---

### பள்ளிக்கூட வசதிப்பணம் ரூபா ஒன்று

பள்ளிக்கூட வசதிப்பணமாக மாணவர்களிடமிருந்து ரூபா ஒன்று மாத்திரம் எதிர்காலத்திற் பெறலாம். விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் முதலியவற்றுக்கு வேறாகப் பணம் பெறலாம். ஆனால் அப்பண விபரம் கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். பணம் கொடாமை காரணமாய் எவ்வாற்றானும் மாணவர் தண்டிக்கப்படுதல் ஆகாது. கல்விப்பகுதியார் மேற்கண்டவாறு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

---

# உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 13-11-60—19-11-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தேகசுகம் இந்தவாரம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும். கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. மற்றவர்களில் அதிகம் தங்கியிருக்க வேண்டாம். ஆனால் பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

நீர் இந்த வாரம் சண்டை தொடுக்க முந்துவீர். குடும்பச் சூழலிலும் தொந்தரவுகளுக்கிடமுண்டு. மனச்சமாதானமிருக்க மாட்டாது. புது முயற்சிகள் தாமதிக்கப்படும்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதம்.

முன் அரை வாரம் குழப்பமாயிருக்கும். வேலை வழக்கத்திலும் கூடுதலாயிருக்கும். பின் அரை வாரம் நல்லாயிருக்கும், புது முயற்சிகளிற் சித்திக்கும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. பணத்துறையில் சித்தியும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. உமது மனம் அமைதியாயிருக்கமாட்டாது. நண்பர்களுடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. சிறிது காலத்துக்கு எது ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தேக சுகமும் குடும்பக் கருமங்களும் இந்த வாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனால் சித்தியாகும். தனலாபங்கள் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சில சொந்தச்சிக்கல்கள் இந்த வாரம் நீக்கப்படும். நிதி நிலைமைகளும் திருந்தும். ஆனால் மனச்சமாதான மிருக்கமாட்டாது வேலை வழக்கத்திலும் கூடுதலாயிருக்கும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தேகசுகம் திருந்தும். உம்முடைய சில சொந்தச் சிக்கல்களும் நீக்கப்படும். பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தரும். கமத்தொழில் முயற்சிகள்மூலம் இலாபங்களும் நிச்சயம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வாரம் முழுதும் தேகசுகம் சிக்கலாயிருக்கும். கண் நோய்களுக்கும் காய்ச்சலுக்கும் இடமுண்டு. உம்முடைய முயற்சிகளில் நீர் அதிக எதிர்ப்புகளை முன்னிட வேண்டி வரும். ஆனால் கடைசியில் நீர் வெல்லுதல் நிச்சயம்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்பக்கருமங்கள் இந்தவாரம் குழப்பமாயிருக்கும், பிதாவழி இனத்தவர்கள் குழப்பங்களுக்கு அதிக உதவியாயிருப்பர். தேகசுகமும் பழுதுபடக்கூடும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஞாயிறும் திங்கள் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், பகைவர் அழிவுக்கிடமுண்டு. செலவதிகரிகும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

முன் அரை வாரம் குழப்பமாயிருக்கும் திங்கள் பிற்பகல் செவவாய் புதன் கவனமாய்க் கழிக்க வேண்டும், வார மிகுதி நல்லாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் சண்டைகளுக் கிடமுண்டு. பிதாவழி இனத்தவர்கள்சண்டைதொடுத்து நிற்பார்கள். ஆனால் நீர் அவர்களை வெல்லக்கூடியதாயிருக்கும், புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கவனமாய்க்கழிக்கவும்,

---

## ஸ்ரீ. தேசிகருக்குப் பாராட்டு விழா

ஷெவிழா 5-11-60 சனிக்கிழமை மாலை 6மணியளவில் வீமன்காமம் சைவசங்கில பாடசாலை மண்டபத்தில் முன்னைநாள் பாடசாலை அதிபர் C. A. இரத்தினவரதர் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. அத்தருணம் தற்போதைய அதிபர் அவர்களால் வரவேற்புரை கூறப்பட்ட பின், தலைவர் அவர்களால் முன்னுரை நிகழ்த்தப்பட்டது. வாழ்த்துப்பா, உபசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டபின் பழைய மாணவர்களின் சார்பாக, ஸ்ரீலஸ்ரீ. சிவபாதசுந்தரனாரின் குருபூசாமன்றச் செயலாளர் தென்மயிலை திரு. செ கோவிந்தசாமி அவர்களால் ஒரு விரிவுரை நிகழ்த்தப்பட்டது: அவர் அதில் குறிப்பிட்டுப் பேசியதாவது, யாழ்ப்பாணத்தில் நாவலர் பள்ளிக்கூடம் என்று சொன்னால் அது ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் ஐயா அவர்களால் தாபிக்கப்பட்ட வண்ணைச் சைவப்பிரகாச வித்தியா சாலையைக் குறிக்கும் என்றும், [illegible] போல வலிகாமம் வ[illegible] உடையார் பள்ளிக்கூடம் என்று சொன்னால் அது சின்னத்தம்பி உடையாரால் தாபிக்கப்பட்ட வீமன்காமம் சைவ வித்தியா சாலையைக் குறிக்கும் என்றும், இனிமேல் வருங்காலத்தில் ஒரு மாணவன் இப்பாடசாலைகளின் பெயரைச் சொல்லி மகிழும் நாள் எந்நாளோ என யோசிக்கக்கூடியதாக இருக்கிறதெனவும் குறிப்பிட்டுப் பேசி, பண்டிதர் நமசிவாய தேசிகரின் சைவத் தமிழ்த் தொண்டுகளையும் பாராட்டி அவர் கற்ற ஆசிரியர்களாகிய வித்துவான் சி. கணேசையர், கவிக்குரு வே. மகாலிங்கசிவம். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. பொ. கைலாசபதி B.SC. ஆகிய இவர்களின் அன்புக்குப் பாத்திரமாக இருக்கின்றார் என்றும் குறிப்பிட்டுப்பேசினர்.

மாணவன் செல்வன் த. சங்கரப்பிள்ளை, ஆசிரியர் திரு மு. ஆறுமுகம் அவர்களும் பேசியபின், மயிலை செல்வி. பரமேஸ்வரி சுவாமிநாதன் அவர்களால் சங்கீத விருந்தளிக்கப்பட்டது. பின் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் [illegible] பரிசில்கள் வழங்கப்பட்டன. அதன்பின் பண்டிதர் தமது உரையை நிகழ்த்தி அனைவோருக்கும் நன்றி கூறினர். தேவாரத்துடன் விழா நிறைவெய்தியது.

---

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்

Std 14

---

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

---

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6113-ம் இலக்க வழக்கில் 1960-ம்ஆ புரட்டாதி மீ 5-ந் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1960-ம்ஆ மார்கழிமீ 10-ந்௳ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி வரையில் அக்காணிகட்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

தொண்டமானாறு
தம்பையா முத்துத்தம்பி
—வழக்காளி.

எதிராக

மட்டுவில் வடக்கு
1. அப்பாபிள்ளை கந்தையா இராமலிங்கம்
2. ,, பெண் குஞ்சரம்
3. ,, கந்தையா மகள் இராசம்மா
—எதிராளிகள்,

தீர்வைத் தொகை:- ரூபா 4644-95, இதற்கு 1958-ம்ஆ கார்த்திகைமீ 6-ந்திகதி தொடக்கம் பணம் இறுபடும் வரையும் 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 274-07.

ஆதனங்கள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக்கோயிற்பற்று:

1. மட்டுவில் வடக்கு ஓடை வயல் நெற்பரப்பு 20. இதில் வடக்குப்பக்கமாக நெற்பரப்பு 10. எல்லை: கிழக்கு விசுவர் மகள் தங்கமுத்துவுக்கும் மருபேருக்குமுரியவாதனம் வடக்கு முருகேசு மகள் பூமணிக்குரியவாதனம். மேற்கு செல்லப்பா வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு காசிநாதர் ஆறுமுகத்துக்குரிய வாதனம், இவ்வெல்லைக் குட்பட்ட வைகளில் தண்ணீர் வழிவாய்க்கால் பங்குகளை நீக்கி அடங்கிய முழுவதும்.

2. மட்டுவில் வடக்கு குடும்பன் சிமா நிலப்பரப்பு $5\frac{3}{4}$. எல்லை: கிழக்கு சின்னத்தம்பி ஆறுமுகத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம் வடக்கும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை இதுமுழுவதும்,

3. மட்டுவில் வடக்கு ஓடை வயல் நெற்பரப்பு $7\frac{1}{2}$. எல்லை: கிழக்கு சிற்றம்பலம் கணபதிப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு திருவெங்கேணிப் பிள்ளையார் கோவிலுக்குரியவாதனம், மேற்கும் தெற்கும் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்குரியவாதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகள் அடங்கலிலும் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கும்,

4. மட்டுவில் வடக்கு வாமகன் வளவும் கிழவிவளவும் பாதியும் நிலப்பரப்பு $10\frac{1}{4}$, இதில் வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு $5\frac{1}{8}$. எல்லை: கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு சின்னத்தம்பி கைம்பெண் கற்பகத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம், தெற்கு தம்பையா கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகளடங்கலில் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கும்.

5. மட்டுவில் வடக்கு ஓடை வயல் நெற்பரப்பு 7 3/4. எல்லை: கிழக்கு சண்முகம் வல்லிபுரத்துக்குரியவாதனம், வடக்கு விசுவர் ஆறுமுகத்துக் குரிய வாதனம். மேற்கு விசுவநாதர் குமாரசாமிக்குரியவாதனம். தெற்கு மட்டுவில் வடக்கு திருவெங்கேணிப்பிள்ளையார் கோவிலுக்குரிய வாதனம். இவ்வெல்லைக் குட்பட்ட வைகளடங்கலில் சொரியலாய் 5/8 பங்கும்.

K. Chithamparapillai
கொமிஷனர்.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. 31-10-60.
M. 140 11-11-60.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

# திருமூலர் காலம்

இந்துசாதனம்7-10-1960ல் திருமூலர்காலம் எது? என்ற கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அரச மரம் பற்றியும் பேசப் பட்டது.

போதி என்ற சொல் தமிழ்ச் சொல். நிகண்டு நான்காவது மரப் பெயர்த் தொகுதி செய்யுள் 15. பார்க் கலாம். அரசின் பெயர் சுவலை, குஞ்சாரசனம், அச்சு வததம், திருமரம், பணை, போதி, கவணம் பிப்பல அரசமரத்தை ஒரு தெய்வீ கம் இலட்சுமீகரம் பொருந் திய விருக்ஷமாக சைவர்கள் பாவித்து, வேப்பும், அரசும் சிவம் சத்தி உறையுமிடமா கக் கொண்டு வேம்பையும் அரசையும் ஒருங்கு சேர்த்து நாட்டினால் சிவசத்தி இரண் டையும் பிரதிட்டை செய்த பலன் தருமென்று நம்பி அப்படி நாட்டி நீர் வார்த்து பிரதக்ஷணம் செய்து பலன டைந்தோர் அநேகர். யோக சாதனை செய்வோர்க்கும் அது இடம்.

திருமூலருடையஇயற்கைப் பெயர் சுந்தரநாதர். கயிலைச் சித்தர்களிலொருவர். இவர் முதல்தடவை தென்னாட்டு யாத்திரை வந்து தில்லையில் மன்றில் பதஞ்சலிமுனி, வியா க்கிரமபாதமுனி முதலியோரு டன் கூத்தப்பன் கூத்துக் கண்டது 8000 ஆண்டுகளு க்கு முன்னென்பர். அதன் பின்னர் 3000 ஆண்டுகள் தவமியற்றினார். பின்னர் 3100 BCயில் அதாவது 4041 ஆண்டுகளுக்கு முன்னர் பாரதச் சண்டை முடிவில் பொதியமலை அகஸ்தியரைப் பார்க்க விரும்பி இரண்டாம் முறை தென்னாட்டுக்கு வந் தார். வரும் வழியில் மகா நதிக்கரையில் பூரி (செக நாதம்) சமீபம் துவாரகைக் கோமான் கண்ணன் ஒரு வேடனாற் கொல்லப்பட்டார். வேடன் கொழுத்திவிட உடனே பெய்த மழை வெள் ளத்தால் கடுகிய கை, கால் பூரிக்குப்பக்கத்தில் ஒதுங்கி யது. பூரியிலுள்ள சனங்கள் கண்ணன் சரீரமென்று கருதி கோயில் அமைக்க எண்ணி அடக்கம் செய்தார்கள் இதுவே செகநாதம். இதனை திருமூலர் நேரே கண்டவர். ஆதலால் இதனை தமிழ் மூவாயிரத்தில் பாடினார்.

இருக்குரு வாகிய
எழில் வேதத்தினுள்ளே
உருக்குணர் வாயுணர்
வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய
வேதியர் சொல்லும்
கருக்குரு வாகிய
கண்ணனுமாமே.
(செய்யுள், 63)

நாயனார் இரண்டாம் முறை தென்னாடு வந்தது 3100 BC ஆகும். அவர் பொதிய மலையை நோக்கிவரும் வழி யில் சாத்தனூரில் திருவருளி யக்க, தம் உடலை ஓர் இடத் தில் சேமித்து வைத்துவிட்டு இறந்துகிடந்த கோக்குலம் மேய்க்கும் மூலன் உடலுட் புகுந்து பசுக்கள் துயர் நீக்கி பின், வைதத இடத்தினின் றும் தன் உடல் மறைந்து விட்டதை உணர்ந்தார். இதனை தமிழ் மூவாயிரத்தில் காட்டினார்.

அகலிடத்தார் மெய்யை
அண்டத்து வித்தைப்
புகலிடத்தெம் மெய்யைப்
போகவிட்டானைப்
பகலிடத்தும் இரவும்
பணிந்தேத்தி
இகலிடத்தே இருணீங்கி
னின்றேனே.
(தமிழ் 3000/41)

பின்பு மூலன் சரீரத்தோடு திருமூலர் என்ற பெயருடன் திருவாவடுதுறை அடைந்து அங்கே கோயிலின் வெளிப் பிரகாரத்தில் மேற்கு மூலை யிலிருந்த அரசமரத்தின் கீழ் யோகத்திலிருந்து வருஷம் ஒரு பாட்டாக 3000 பாககள் தமிழ்மூவாயிரம் பாடியருளி கி. மு. நூறு ஆண்டுகளுக்கு முன் பரமுத்தி அடைந்தார். நம் திருமூலர் திருவாவடு துறைக்கோயின் முன்னுள்ள பலிபீடத்தின் கீழ் வைத் திருந்த தமிழ் மூவாயிரம் வரையப்பெற்ற சுவடியை கி. பி. 634 முதல் கி. பி. 650 வரையில் வாழ்ந்த திருஞான சம்பந்த சுவாமிகள் எடுத்தார் என்றது கர்ணபரம்பரைக் கதை.

சி. சேதுகாவலபிள்ளை,
சுழிபுரம்

---

## ஆறுமுகநாவலர் உயர்நிலைப்பள்ளி

—:—

— சிதம்பரம் நவ. 7

சிதம்பரம் ஆறுமுகநாவலர் உயர்நிலைப்பள்ளி மாணவர் களின் பெற்றோர்கள் கூட்டம் 6-11.60 அன்று நகரசபை யின் தலைவரும் பள்ளிக்கூடத் தின் தருமபரிபாலகர்களில் ஒருவருமான ஸ்ரீ எம். சுப்ப ராயபிள்ளை அவர்கள் தலை மையில் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் ஸ்ரீ சுவாமிநாதன் எல்லாரையும் வரவேற்றார். பள்ளிக்கூடக் கண்காணிப்பாளர் ஸ்ரீ குரு சாமி தேசிகர் "கல்விச் சீர மைப்பும் - பெற்றோர்களும்" என்பதுபற்றிப் பேசினார்.

கூட்டத்தின் முடிவில் இம் மாதக் கடைசியில் நடை பெறப்போகும சிதம்பரம் தாலுக்கா கல்வி சீரமைப்பு மகாநாட்டின்போது இப்பள் ளிக்கூடத்திற்கு வேண்டிய

மேசை, நாற்காலி போன்ற தளபாடங்களை ரூபாய் 5 ஆயிரத்திற்கு சேகரித்துக் கொடுப்பதென்று பெற்றோர் கள் முடிவு செய்து அதற் கான ஒரு செயற்குழுவையும் அமைத்துள்ளனர்.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

---

## யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்களின் எதிர்ப்பு

பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதைக் கத்தோலிக்க குருபீடங்கள் ஒருமுகமாய் எதிர்க்கின்றன என்று அறிக் கைகள் முன்பு வெளிவந்தன. நாட்டின் பல பகுதிகளில் கத் தோலிக்க மக்கள் எதிர்ப்பு உரைகளை வெளியிட்டு வரு கிறார்கள்.

பாஷையூர் சென்ற் அந் தோனியார் தேவாலயத்தி லும் சுண்டிக்குளி சென்ற் ஜோன்ஸ் தேவாலயத்திலும் யாழ்ப்பாணக் கத்தோலிக்க மக்கள் ஒன்றுகூடித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள் ளார்கள். இவ்வாறு வளர்கி றது எதிர்ப்பு.

---

## ஸ்ரீ பி. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களுக்கு உயர்வு

=0=

யாழ்ப்பாணப் பெரும்பிரிவு நீதிபதி ஸ்ரீ பி. ஸ்ரீஸ்கந்த ராசா அவர்கள் உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமிக் கப்பெற்றுள்ளார்.

---

## இறுதிவரையும் எதிர்ப்பார்கள் தமிழாசிரியர்கள்

சிங்களம்மட்டும் என்ற சட்டம் அமைக்கப்பட்ட பின் நியமனம் பெற்ற தமிழ் ஆசிரியர்களும் சிங் களம் படிக்க வேண்டு மென்று கல்விப்பகுதியார் செய்த தீர்மானத்தைத் தமிழ் ஆசிரியர்கள் எதிர்க் கின்றனர். இத்தொடர்பில் அவர்களின் குழு ஒன்று கல்வி மந்திரியைப் பேட்டி கண்டது. சங்கத்தலைவர் திரு. கு. வி. செல்வத்துரை அக்குழுவுக்குத் தலைமை வகித்தார். தனித்தமிழாசிரி யர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டு மென்ற நிபந்தனையை இறு திவரை எதிர்க்கப்போவ தாக அவர்கள் கல்விமந் திரிக்குத் தெரிவித்துள்ளார் கள்.

---

## பெண்களுக்குப் பேட்டி அளிக்க மறுப்பு

பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை எதிர்த்துத் தங் கள் கருத்துக்களை முதல் மந் திரிக்குத் தெரிவிக்கும் பொருட்டுப் பெருந்தொகை யான பெண்கள் முதல் மந் திரியின் வாசஸ்தலத்துக்குச் சென்றனர். அவர்களைக் காண முதல் மந்திரி மறுத்து விட்டார். ஐக்கிய தேசியக் கட்சியினரின் தூண்டுதலால் இவர்கள் சென்றார்களென் றும் இவ்வித கிளர்ச்சிகளுக்கு இடங்கொடுக்கப்படமாட்டா தென்றும் தாம் வெளியிட்ட அறிக்கையில் முதல் மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

---

## குருமகாசந்நிதானத்தின் காசி யாத்திரை

— சிதம்பரம் நவ. 7

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனப 21-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் வழக் கப்போல் துலாமாத கடைசி புண்ணியகால ஸ்நானம் காசி கங்காதீர்த்தத்தில் செய்து கொண்டு வருதற்காக நேற்று யந்திரவண்டி (கார்) மூலமாக காசி க்ஷேத்திரத்திற்குச் சென் றுள்ளார்கள். யாத்திரை ஒருமாதகாலம் நடைபெறும் என்று தெரியவருகின்றது.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

---

# தமிழர் நிலைமைபற்றி நடக்கும் பேச்சுக்கள்

## பொறுப்பாயிருப்பவர்கள் விழிப்பாயிருக்கவேண்டிய கடமை

ஐக்கிய இலங்கையை உரு வாக்குவோம், யாவரும் சம உரிமையுடன் வாழச்செய் வோம் என்று உறுதிமொழி கூறி ஐக்கிய தேசியக் கட் சியை அமைத்து ஆட்சியை நடத்தினார் ஸ்ரீ டி. எஸ். சேனநாயக. தமிழினத்தின் மூலவேரை அறுக்கும் செயல் எதுவும் அப்பொழுது புலப் படாதபோதும், தமிழ் மக்க ளின் உரிமைகளாகிய கிளை கள் ஒவ்வொன்றாய் வெட் டப்பட்டமை மிகத் தெளி வாகப் புலப்பட்டது. அதி கார வர்க்கத்தின் ஆதரவை அன்று பெற்றமையாற்போ லும் சிலதமிழ்மக்களே அவ் வநீதியான செயல்களுக்குச் சமாதானஞ் சொன்னார்கள். தந்தையின் அடிச்சுவட்டிற் சென்று ஆட்சியை நடத்தி னார் ஸ்ரீ டட்லி சேனநாயக. அவர் பதவியைத் துறந்தார்.

அவருடைய இடத்தில் வந் தார் சேர். ஜோன் கொத்த லாவல. உரிமைகள் பல பறிக்கப்படுவதைக் கண்ட தமிழ் மக்கள் தமிழ் மொழிக் குச் சட்டபூர்வமாகச் சமஅந் தஸ்து அளிக்கும்படி கேட் டார்கள். அப்படியேயாகும்

**"நம்பிக்கெட்ட தமிழன்"**

என்று இதயபூர்வமாய் அவர் வாக்குறுதி அளித்தார். சிங் கள இனத்தின் இரட்சக ரெனச் சிங்கள மகாசபை அமைத்த ஸ்ரீ பண்டாரநாய கவின் செல்வாக்கு மிகுந்து வந்ததைக் கண்ட ஐக்கிய தேசியக் கட்சியார் அவரை முந்தும் கருத்துடன் தனிச் சிங்களப் பிரேரணையைக் கள னியில் நிறைவேற்றினார்கள். அத்துடன் மடிந்தது சேர் ஜோன் கொத்தலாவலவின் வாக்குறுதி. ஐக்கிய தேசி யக் கட்சியின் அந்தரங்க நோக்கமும் வெளியாயது.

யார் எதைச் செய்த போதிலும் அவர்களை வெல் லுங் கருத்துடன் மக்கள் முன்னணி (சிங்கள மக்கள் முன்னணி) அமைத்து முன் னுக்கு வந்த ஸ்ரீ பண்டார நாயக, சிங்களம மட்டுமே என்று பேரொலி செய்தார் அதைக்கேட்ட தமிழ் மக்கள் கிளர்ச்சிசெய்தனர். பண்டார நாயக—செல்வநாயகம் உடன் படிக்கை அப்பொழுது உரு வெடுத்தது. நீதி வழங்கு வேன் என்று கூறி "நியாய மான தமிழ் உபயோகம்" செய்தற்கென ஒரு சட்டதிட் டத்தையும் அமைத்தார் ஸ்ரீ பண்டாரநாயக. தமிழர சுக் கட்சியார் அதை ஏற்ற னர். தமிழ் மக்களுள் மற் றொரு சாரார் தமிழினத்தின் மூலாதார உரிமைகளைப் பறிப் பதாயிருக்கிறதென்று இதை வன்மையாகக் கண்டித்தனர்.

இவ்வாறு தமிழ் மக்களின் வன்மையான கண்டனத்துக் குள்ளாகிய இது சிங்கள இனத் தை வேரோடுகளையும் பேரா பத்தா யமைகிறதென்று அப யக் குரலெழுப்பி, வழியெங் கும் ஓலமிட்டுச் சிங்கள மக் களைக் கூவியழைத்துக் கண்டி யாத்திரை செய்தார் ஸ்ரீ டட்லி சேனநாயக. புத்த குருமார் மற்றொருவாறு கிள ளர்ச்சி செய்தனர். திடீ ரெனத் துண்டுதுண்டாய்க் கிழிபட்டது செல்வநாயகம் பண்டாரநாயக ஒப்பந்தம், இவை இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்க, புத்தகுரு ஒரு வரின் துப்பாக்கிக் கிரையா னார் ஸ்ரீ பண்டாரநாயக. நடந்தது தகநாயகவின் இடைக்கால அரசாங்கம். அதைத் தொடர்ந்து உருவா கிய ஐக்கியதேசியக்கட்சி அர சாங்கம் ஆட்பலமின்மையால் அற்றுப்போக, ஸ்ரீமதி பண் டாரநாயகவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி சம சமாச பொதுவுடைமை ஆத ரவுடன் தனி அதிகாரம் செலுத்துகின்றது. எங்கும் தனிச்சிங்களமே, எல்லாம் தனிச்சிங்களமே என்ற சத் தம் எங்கும் செவிடுபட ஒலிக் கின்றது. நீதியரசர்களே சிங் களமே என்று சொல்ல முற் பட்டுவிட்டனர். அந்நிலை மையிலே பேரிடியாய் இடிக் கும் பாடசாலைச் சட்டம் வந் தது. தமிழினத்துக்கு இனி மீட்சியில்லையென்று எங்கும் பெரும் தள்ளாட்டம் ஏற் பட்டுள்ளது.

இத்தருணத்தில் முதல் மந்திரியுடன் பேச்சொன்று நடக்கின்றது. நீதி வழங்கப் படுமென்று உறுதிமொழி பிறக்கின்றது. சொல்லுதல் எளிது செய்தல் அரிது என் பதை அடிக்குமேல் அடி அடிக்கப்பட்டு முன்பு கண்டு விட்டோம். யாத்திரை சென்ற சேனநாயக உற்றுப் பார்த்தபடியே இருப்பார். இராசரத்தின கட்சியார் ஈட் டியை நீட்டியபடியே நிற்பார் கள். இந்நிலைமையில் ஒரு பெண்மணி என்ன செய் வாரோ?

உறுதிமொழி எதுவாயிருந் தாலும் அது செயலாக்கப்படு வது எவ்வாறு, எப்பொழுது செயலாக்கப்படும் என்பன பற்றிப் பேச்சுகளிற் பங்கு பற்றும் தமிழ் மக்கள் மிக விழிப்பாயிருக்க வேண் டும், தமிழ் மக்கள் வாழ்வதா அல்லது மாள்வதா என்ற நிலைமையில் சோர்வென்பது சிறிதுமில்லாது தவிர்த்தல் பொறுப்புவாய்ந்த ஒவ்வொரு வர்மீதுமுள்ள கடனாகும்.

---

## குழந்தை மாணவர் வயது

மாணவர்களாகப் பள்ளிக் கூடங்களிற் சேர்க்கப்படும குழந்தைகளின் வயது முன்பு கல்விமந்திரி கூறியதுபோல் உயர்த்தப்படமாட்டாது. கல்வி விசாரணைக்குழு ஒன்று விசாரணை செய்து அதுபற் றித் தீர்மானிக்கும் வரையில் இப்பொழுதுள்ள ஒழுங்கே நீடிக்குமெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககாலந் தொடக்கம் ஆட்சியில்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

காணப்படுகிறது. அது வருமாறு:- ஓரா (Ora) என்ற நகரம்கைப்பற்றப்பட்டதை அறிந்தபொழுது, பகிரா வில் (Bagira) இருக்கும் இந்தியர்கள் நம்பிக்கையை இழந்தார்கள். அவர்கள் தங்கள் நாடு நகரங்களை விட்டு 'அயோ னொஸ்' (Rock of Aornos) என்ற குன்றிற் போய் ஒதுங்கிக் கொண்டார்கள். இக்குன்று ஒரு பிரமாண்டமான பொருள். 8000 அடி உயரம். இருபத்தைந்து மைல் சுற்றளவு. இக்குன்றை சியுஸ் (Zeus) மகன் ஹெருக்கி லிஸ் (Heracles) கைப்பற்ற முடியாமல் விட்டுவிட்டார் என்று ஒரு கதையுண்டு. இக் கதையை நான் நம்ப வில்லை. இது பொது மக்கள் கட்டிய பொய்க் கதை என்பது எனது எண்ணம். ஹெருக்கிலிஸ் இந்தியா வின்மேல் படையெடுத்த வர் என்பதை நம்ப முடியாது.

மற்றச் சம்பவம் மேல் குறித்த ஆங்கில நூலில் 163 ம் பக்கத்தில் காணப்படுகிறது. அது வருமாறு: மகா அலெக்சான்டருடைய பாதையிலே கொபென் நதிக்கும் (Cophen) இந்து நதிக்கும் இடையில் நிசா (Nysa) என்ற நகரம் இருக்கிறது. இந்த நகரம் டியோ நிசஸ் (Dionysus) இந்தியர்களை வென்ற காலத்தில் கட்டப்பட்டது. இந்த டியோ நிசஸ் ஆர் என்று ஒருவருக்கும் தெரியாது. இவர் எங்கிருந்து புறப்பட்டார், எப்படி இந்தியர்களோடு மாத்திரம் யுத்தம் செய்து வென்றார் என்பது மர்மமாயிருக்கிறது. இவைகள் பழைய கட்டுக்கதைகள். இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதில் பயனில்லை.

இந்த இரு சம்பவங்களும் சற்று யோசிப்பவர்களின் சிந்தனைகளைக் கிளறுகின்றன. மகா அலெக்சான்டருக்கு முன்னும் கிரேக்கர்கள் இந்தியா வின்மேல் படையெடுத்து வென்றதாக ஏரியன்காலத்தில் கதைகள் நிலவி வந்திருக்கின்றன. ஏரியன் இக் கதைகளை நம்ப முடியாதெனக் கூறுகிறார்.

நாம் வெகு தூரம் அலைந்துவிட்டோம். காரியத் தோடுதான். இருக்க, மகா அலெக்சான்டரைப் பற்றி இங்கு குறித்த கருத்துக்களைத் தொகுத்து நோக்குவாம்.

(1) மகா அலெக்சான்டர் இந்தியாவின் மேல் படையெடுத்து இந்து நதியைக் கடந்து கங்கைப்பிர தேசத்துக்குப் போகமுயன்றார். ஆனால் அவருடைய படைகள் செல்ல மறுத்தனர். அதனால் அவர் திரும்பி இந்துநதி மூலம் தனது சொந்த நாட்டை நோக்கிப் போனார், போன வழியில் இறந்துவிட்டார்.

(2) இக்கதைக்கு இந்தியாவில் ஒருவித அகச் சான்றுகளும் இல்லை. இதை கலாநிதி வின்சன் ஏ. சிமித். பேராசிரியர் பாஷம் ஆகியவர்களின் கூற்றைக்கொண்டு நிரூபித்திருக்கிறோம்.

(3) கிரேக்க நாட்டில், மகா அலெக்சான்டருக்கு முன்னும் கிரேக்கர்களோ அவர்கள் தெய்வங்களோ இந்தியாவின்மேல் படையெடுத்து வென்றதாகப் பல கட்டுக் கதைகள் நிலவி வந்தன.

(4) இக் கட்டுக் கதைகளைப் போல் அலெக்சான்டரின் படையெடுப்பும் ஒரு கட்டுக் கதையெனக் கூறுவாருமுண்டு. அவர்கள் கூற்றுக்குப் போதிய ஆதாரமும் உண்டு

இஃது இவ்வாறிருக்க நமது பல்கலைக் கழகப் பேராசிரியர் சுப்பிரமணியப் பெருமான் பெயருள் ஒன்றாகிய 'கந்தன்' என்ற பெயர் அலெக்சான்டரின் பெயரின் திரிபு என்று 'ஒரு சிலர்' கூறுவர் என்று 'ஒரு சிலர்' மேல் ஏற்றிக் கூறுகின்றார். ஒரு சிலர் ஹிட்லர் (Hitler) கிட்டிணரின் அவதாரமென்றும் அவர் பூபாரம் தீர்க்க பூமியில் அவதரித்தார் என்றும், அவர் நடத்திய உலக மகா யுத்தம் நவபாரதம் என்றும் கூறுகிறார்கள் இன்னும் 'ஒரு சிலர்' கந்த சுவாமியார் சூர பத்மாவை வென்று தெய்வயானையை மணஞ்செய்த பின் கந்த புரியில் எழுந்தருளியிருந்தார் என்றும், அதுதான் இங்கிலாந்திலுள்ள கன்ற பெரிநகரமென்றும்வாதாடுகிறார்கள். கந்தபுரி 'கன்ற பெரி'யானதாம்! (Cantebury) இன்னும் 'ஒரு சிலர்' எத்தனையோ எத்தனையோ நவீன ஆராய்ச்சிகளைச் செய்கிறார்கள். இவைகள் எல்லாம் பல்கலைக் கழகத்தில் இடம்பெறத் தகுதியுடையவையா? ஒருவேளை இருக்கலாம், அக நூற்றுறைப் பகுதியில்!!

இனி, மகாஅலெக்சான்டர் இந்தியாவின் மேல் படையெடுத்த கதையை உண்மை என்று வைத்துக்கொண்டாலும் பேராசிரியரின் கூற்றுக்கோ அன்றி அவருடைய 'ஒரு சிலரின்' கூற்றுக்கோ ஒருவித ஆதாரமுமில்லை. 'கந்தன்' என்ற சொல்லுச் சங்ககாலந்தொட்டுத் தமிழ் கூறும் நல்லுலகில் ஆட்சியில் இருக்கிறது. கந்தரத்தனார், கந்தப்பிள்ளைச்சாத்தனார் என இரு சங்கப் புலவர் இருந்ததாக அறிகிறோம். இவருள் கந்தரத்தனார் காஞ்சீபுரம் தாலுகாவில ஓரகடமென்று திரிந்து வழங்கும் உரோடகம் என்னும் ஊரவர், அதனால் அவர் உரோடகத்துக் கந்தரத்தனார் என்று வழங்கப் பட்டு வந்திருக்கிறார். இவர் பாட்டுக்கள் நற்றிணை (306) குறுந்தொகை (155) அகநானூறு (23, 95, 191) முதலாய சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இன்னும் குறுந்தொகையில் 94ம் பாட்டை இயற்றிய சங்கச் சான்றோரின் பெயர் கந்தக் கண்ணனார். அன்றியும் புறநானூற்றின் 380 ம் பாடலின் தலைவன் கந்தன் என்பான். இவனை யொட்டி 'டாக்டர் உ. வே. சாமிநாதையர் குறிப்பு வருமாறு: "கந்தனென்பது, நாஞ்சில்மலைத்தலைவர் பரம்பரையில் உள்ளானும் இப் பாட்டுடைத் தலைவனுமாகிய ஒருவன் பெயர்". எனவே சங்கப் பாடல்களைப் பாடியவரும் பாடப் பட்டவரும் 'கந்தன்' என்ற பெயரை யுடையவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

"அலெக்சான்டர் இந்தியாவிற்குவந்த வழியிலுள்ள கந்தகார்முதலிய இடப்பெயர்கள் அவன் பெயரின் தொடர்போடு இன்னும் வழங்குகின்றன" என்று பேராசிரியர் அவர்கள் கூறுகிறார். நாம் இங்குக் காட்டிய சங்கப்புலவர்களும் சங்ககாலக் குறுமன்னனும் 'அலெக்சான்டர்' என்ற பெயர் திரிக்கப்பட்டு வந்த 'கந்தன் என்ற பெயரை இட்டுக் கொண்டார்களா? கன்ற பெரியை (Conterbury) கந்தபுரியாக்கிய வீரனிலும் பார்க்க வீரனயிருக்கிறார் எங்கள் பேராசிரியர்!

—தொடரும்

## கோயிலாக்கண்டிச் சிவாலயத்தில் அம்பாள் கோயில்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, மேற்படி கோயிலின் நிருவாகத்தை எற்றுப் புனருத்தாரணஞ் செய்யும் கடமையைத் திருவருளை முன்னிட்டு ஆரம்பித்திருக்கின்றது. சைவ முறைப்படி கிரியைகள் செய்யப் பெற்றபின் இக்கோயிலுக்குரிய அம்பாள் கோயிலுக்கு 7-11-60 திங்கட்கிழமை முற்பகல் தேவார திருவாசக பாராயண சகிதமாய் ஐக்கிய லாபநிதிச் சிறுப்பர் திரு. சுகனகசபை அவர்கள் அத்திவாரமிட்டார்கள்.

## திருமூலநாயனர் குருபூசை

புதன்கிழமை 2-11-60 இரவு திருமூலநாயனர் குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. மேற்படி குருபூசையில் திரு. வே. கந்தையா அவர்கள் திருமூல நாயனரைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர்கள். திருமூலநாயனர் வேதசிவாகமக் கருத்துக்களை அமைத்துத் தெய்வத் திருமுறையாகிய திருமந்திரத்தைப் பாடியருளினரெனவும் ஞானத்தை அடைவதற்கு வழியாய், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிகளைப் பற்றித் திருமூலநாயனர் அந் நூலிற் கூறியிருக்கின்றாரென [illegible]

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி
தங்கபஸ்பம்
உபயோகியுங்கள்.
தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம் இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.
தாளக பஸ்பம் ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.
24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனம்.
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்,
சுப்பர் சின்னத்தம்பி கைம்பெண் செல்லம்மா
—வழக்காளி

இல. M.B 1660

எதிராக

மானிப்பாய்,
1. பண்டாரி சின்னத்தம்பி
2. பெண் அன்னம்
3. மருதன் கந்தர்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 1660-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக்காணிகள் 1960-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 26-ம் திகதி 26-11-60)சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1917-35 ம், இதில் ரூபாய் 1250-க்கு 30-5-57 திகதி தொடக்கம் 5-9-57 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதிதொடககம் மூழுத்தொகைக்கும் இறுபடும்வரைகதும் 100-க்கு 5 வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 213-15 சதம். இதில் ரூபா 1000-ம் மேலும் ரூபா 100-ம் மேலும் ரூபா 399-50சதம் இறுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற்கோயிற்பற்று உடுவிலிறை "ஈச்சந்தனை" நிலப் பரப்பு 3½-ம் கிழக்கே பூவிலிங்கம் பெண் தங்கரத்தினத்தின் காணியில் தெற்கேயிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் தூர்வை வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை கிழக்கும் மேற்கும் மருதன் கந்தருக்கும் பெண் தங்கத்திற்குமுரிய ஆதனம். வடக்கு கதிர்காமர் கைம்பெண் சிதம்பரத்தின் ஆதனம். தெற்கு மேலே குறிக்கப்பட்டிருக்கும் கிணற்றுக்கு போகும்வழிவாய்க்கால் இதடங்கலும் இன்னும் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் உரித்தும். மூற்பதிவு H 220/151.

2, மேற்படி வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று மானிப்பாயிறை "மனிவீர பதிராயன் சீமாவும், வன்னிய வளவும் தன்னையும்" நிலப்பரப்பு 7 15/16-ம் இதில் தெற்கே நிலப்பரப்பு (1-ம்) குளி 15-ம் வான் பயிர் செய்பயிர்களும் தென் மேற்கேயிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் தூர்வை வழி வாய்க்கால் உரித்தும், எல்லை கிழக்கு இதன் மிகுதி ஆதனமும் புதிதாக வைக்கப்பட்ட 6 முள அகலமுள்ள ஒழுங்கை மேற்கேயிருக்கும் ஒழுங்கைக்குப் போக்குவரவு செய்தற்கு, மேற்கு மருதன் கணபதியின் ஆதனம். தெற்கு இராமு அருணிக்கும் நீக்கிலான் பெண் தெய்விக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும், முற்பதிவு E 247/226.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 16-10-1960,
M 143 11-11-60.

ஏந்திர கைத்தொழிற் சமாசம்
வரையறுக்கப்பட்டது
"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)
பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.
எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;
(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புரேஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.
(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின் சாரக்கம்பியமைத்தல்,
(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 11-11-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org